Good Food, Good Life

**நட்சத்திர வர்த்தகநாமமான *Maggi*, அன்னையருக்கான சமையல் இணையத்தளத்துடன் டிஜிட்டல் சாதனை இலக்கை எட்டியுள்ளது**

*இணையத்தளத்தின் மூலமாக உணவு தயாரிக்கும் முறைகள் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான பயனுள்ள குறிப்புக்களுடன் பெண்களுக்கு தொடர்ந்தும் அதிகார வலுவை அளிக்கின்றது*

இலங்கையில் அனைவராலும் மிகவும் நேசிக்கப்படுகின்ற, நட்சத்திர உணவு வர்த்தகநாமமான *Maggi*, கடந்த 30 ஆண்டுகளாக பெண்களுக்கு அதிகார வலுவை அளிப்பதில் மிகவும் உறுதியான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளதுடன், புதிய தலைமுறை அன்னையருக்கு விரைவாகவும், இலகுவாகவும் உணவு தயாரிக்கும் முறைகளை கண்டறிய உதவும் வகையில், இம்முறை அன்னையர் தினத்தன்று www.maggi.lk என்ற தனது சொந்த இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளது. *Maggi* இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு விசேடமான அன்னையர் தின நிகழ்வில் கலந்துகொண்ட அன்னையர்களால் இந்த இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நுகர்வோரின் புதிய போக்குகள் மற்றும் விருப்பத் தெரிவுகளை ஈடுசெய்யும் முகமாக டிஜிட்டல் துறையில் தனது பிரசன்னத்தை மேலும் பலப்படுத்திய வண்ணம், *Maggi* இன் புதிய இணையத்தளமானது நவீன, டிஜிட்டல் அறிவு மிக்க, குறைந்த நேரத்தை மட்டுமே செலவழிக்கக்கூடிய அன்னையருக்கு பாரம்பரியமான இலங்கை உணவு வகைகள் முதல் சர்வதேச உணவு வகைகள் வரை, பல்வேறுபட்ட, எளிமையான மற்றும் சுவைமிக்க Maggi உணவு வகைகளை தயாரிப்பதற்கு உதவுகின்றது. பிள்ளைகளுடன் இணைந்து சமைத்தல் மற்றும் ஒவ்வொரு உணவு வகையிலும் அடங்கியுள்ள ஊட்டச்சத்து தொடர்பான விபரம் போன்ற பயனுள்ள தகவல்களை வழங்கி, அன்றாட சமையலை மகிழ்வுடன் மேற்கொள்ளச் செய்யும் ஏனைய பல்வேறு தகவல்களையும் இது வழங்குகின்றது.

“கடந்த காலத்தில் எத்தனையோ தலைமுறைகளாக இலங்கை அன்னையர்கள் உபயோகித்து வந்துள்ள பாரம்பரியமான வீட்டு உணவு தயாரிப்பு முறைகளை வழங்குகின்ற டிஜிட்டல் தளமேடை ஒன்றை அறிமுகப்படுத்துவதையிட்டு பெருமை அடைகின்றோம். இலங்கை உணவு வகைகளை நவீன வழிகளில் தயாரிக்கும் கலையைக் கற்றுக்கொள்ளும், முற்றிலும் புதிய அனுபவத்தை எமது இணையத்தளம் புதிய தலைமுறை அன்னையருக்கு வழங்குகின்றது” என்று உணவுத் துறையின் உதவித் தலைமை அதிகாரியான பிரியதர்ஷினி கருணாரட்ன அவர்கள் குறிப்பிட்டார். “உணவின் வகை, தயாரிக்கும் நேரம் மற்றும் தாம் விரும்புகின்ற உணவு வகை ஆகியவற்றின் அடிப்படையில் உணவு தயாரிக்கும் முறைகளை வெவ்வேறாக பிரித்து அவற்றை பெற்றுக்கொள்ளும் விசேட அம்சத்தை எமது இணையத்தளம் கொண்டுள்ளது. ஊட்டச்சத்து பெறுமதி அளவுகள், கலோரி எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு உணவு வகையையும் சமைக்கும் முறை மற்றும் அதன் ஆரோக்கியம் தொடர்பான பயனுள்ள தகவல் போன்றவற்றை வழங்கி, அனைத்தும் ஒன்றிணைந்த ஒரு தளமேடையாகத் திகழ்கின்றது.”

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் கிடைத்துவருகின்ற *Maggi*, நாடெங்கிலுமுள்ள அன்னையர் தமது குடும்பத்திற்கு சுவைமிக்க மற்றும் ஊட்டச்சத்து நிரம்பிய உணவுத் தீர்வுகளை வழங்கும் அதிகார வலுவை அவர்களுக்கு வழங்கி வந்துள்ளது. *Maggi* Devilled பேஸ்புக் பக்கத்தின் மூலமாக டிஜிட்டல் துறையில் கால் பதித்து, சமூக ஊடகத்தில் வெற்றிகரமாக நிலைபெற்று, மூன்று வருடங்களின் பின்னர் இந்த *Maggi* இணையத்தளத்தின் ஆரம்பமானது, அதன் டிஜிட்டல் பயணத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாதனை இலக்காக அமையப் பெற்றுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற SLIM - Nielsen மக்கள் தெரிவு விருதுகள் நிகழ்வில் தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் ‘வருடத்தின் மிகச் சிறந்த உணவு வர்த்தகநாமம்’ என அமோக வாக்குகளைப் பெற்றுள்ள இந்த வர்த்தகநாமம், இலங்கை மக்கள் *Maggi* மீது தொடர்ச்சியாக வைத்துள்ள விசுவாசம் மற்றும் மாற்றமடைந்து வருகின்ற நுகர்வோரின் வாழ்க்கை முறைகள் மற்றும் தேவைகளுக்கேற்ப மாற்றங்களை வெற்றிகரமாக உள்வாங்கும் திறன் ஆகியவற்றை அதன் மூலமாக வெளிப்படுத்தியுள்ளது.